<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | IA.01/2022 in ID.7/2020, 8/2020, 16/2020, 49/2020, 126/2021 | சாட்சியம் | **:** | **RW1** |
| **Name** | **:** | திரு.சம்பத் | | | |
| **Date** | **:** | **06.01.2025** | | | |
| **Time** | **:** | **11.03 a.m to 11.20 a.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு. சம்பத் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இன்றைய தேதியில் ஒரகடத்தில், ஒரகடம் ராயல் என்ஃபீல்ட் எம்பிளாயிஸ் ஜெனரல் யூனியன் செயல்பட்டு வருகிறதா என்றால் வருகிறது. எங்கள் சங்கத்தை பொருத்தவரையில் கடைசியாக 2024 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்றது. அதன் பிறகு பொதுக்குழு கூட்டப்பட்டதா என்றால் கூட்டப்பட்டது. எங்கள் சங்கத்தில் தேர்தல் எப்போது நடைபெற்றது யார் யார் அதில் கலந்து கொண்டார்கள் எப்போது பொதுக்குழு நடைபெற்றது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் மினிட்ஸ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் ஒரகடம் தொழிற்சாலையில் இரண்டு தொழிலாளர்கள் தவிர மற்ற அனைவரும் எதிர்மனுதாரர் சங்கத்தின் உறுப்பினர்கள் என்றால் தவறு. இன்றைய தேதியில் ஒரகடம் ராயல் என்ஃபீல்டு தொழிற்சாலையில் சுமார் 700 பேர் வேலை பார்க்கிறார்கள். இன்றைய தேதியில் ஒரகடம் தொழிற்சாலையில் 1295 தொழிலாளர்கள் உள்ளார்கள் என்றாலும்

அவர்கள் அனைவருக்கும் நிர்வாகமானது ஒரகடம் ராயல் என்ஃபீல்டு எம்பிளாயிஸ் ஜெனரல் யூனியன் தொழிற்சங்கத்தின் பெயரில்தான் சந்தா தொகை பிடித்தம் செய்து வருகிறது என்றால் இல்லை. தொழிலாளர்கள் அனைவரும் மேற்படி சங்கத்தில் தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றாலும் அதன் காரணமாக அவர்கள் தாக்கல் செய்த இந்த வழக்குகள் அனைத்தையும் மேல் நடத்த வலியுறுத்தவில்லை என இசைவு தெரிவித்து இருக்கிறார்கள் என்றால் இல்லை. இன்றைய தேதியில் இரண்டு தொழிலாளர்கள் மட்டும்தான் எங்கள் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றாலும் நான் சொல்வது போன்று தேர்தல் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல தேர்தல் நடத்தப்பட்டு E - Form அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தப்பட்டது சம்பந்தமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்றால் நினைவில்லை. இந்த நீதிமன்றத்தில் எங்கள் சங்கத்தின் மூத்த நிர்வாகிகள் எந்த வழக்கினை மேற்கொண்டு நடத்த விரும்பவில்லை என தெரிவித்து ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் அவ்வாறு தாக்கல் செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை. சங்கத்தில் எந்த நிர்வாகிகளுக்கு சங்கத்தை மேற்கொண்டு நடத்துவதற்கு உரிமை உள்ளது என தீர்மானிப்பதற்காக சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தொழிற்சங்கம் சட்டப்படி நாங்கள் உரிமை பெற்று இருக்கிறோம் என்பதால் சிவில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தொழிற்சங்க சட்டப்படி உரிமை வாங்கி உள்ளோம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோம். எங்கள் தொழிற்சங்கத்துடன் சம்பளம் குறித்து ஒப்பந்தம் அல்லது போனஸ் குறித்து ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்தவில்லை. ஒரகடம் ராயல் என்பீல்ட் தொழிற்சாலையில் உள்ள

தொழிலாளர்கள் யாரும் எங்கள் சங்கத்தை அங்கீகரிக்கவில்லை என்றாலும் நானும் தலைவரும் தொழிற்சாலை தொழிலாளர்களாக இல்லாமல் மூன்றாவது நபர்களாக இருந்து கொண்டு இந்த வழக்கை நடத்துவதற்கு எங்களுக்கு முகாந்திரம் இல்லை என்றாலும் சரியல்ல மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகளை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள் தொழிலக பணிகள் பணி நிரந்தரப்படுத்துதல் சட்டத்தில் உத்தரவு பெற்று அதன் பெயரில் உயர் நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு நிலுவையில் உள்ளது என்றால் நிர்வாகம் தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளது.

S SUJATHA

Presiding Officer,
Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.01.18 18:12:27 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:06.01.2025